Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 196/2025 PW-2**

Name : டேவிட்
Father / Husband name : அண்ணாமலை
Village : விழுப்புரம்
Age : 38
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 18.03.2026

Accused present. Defence side counsel present. Witness identified by HC 248.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது விழுப்புரம் மேற்கு காவல் நிலையத்தில் 940 தலைமைக்காலவராக பணிபுரிகிறேன். கடந்த 03.09.2018 அன்று ஒலக்கூர் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலைக்காவலராக பணியிலிருந்தபோது மாலை சுமார் 7 மணியளவில் மணல் திருட்டு சம்மந்தமாக உதவி ஆய்வாளர் நடராஜன், த.கா.746 கணபதி, 1790 த.கா. இராஜராஜசோழன் அவர்களுடன் நானும் கீழ்காரணையிலிருந்து ஏவலூர் மார்க்கமாக செல்லும் சாலையில் ரோந்துபணிக்கு சென்றபோது எங்கள் வாகனத்திற்கு முன்னர் டிப்பருடன் கூடிய டிராக்டர் லாரியை சந்தேகத்தின்பேரில் சோதனை செய்துபார்த்தபோது அதில் சுமார் 1 யூனிட் ஆற்றுமணல் இருந்தது. டிராக்டரை ஓட்டி வந்த ஓட்டுநர் இறங்கி ஓடிவிட்டார். பதிவேண் இல்லாத டிராக்டர் மற்றும் மணலை அந்நிய சாட்சிகள் யாரும் இல்லாததால் உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினார். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகசரிலுள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வாகனத்துடன் காவல் நிலையம் வந்து உதவி ஆய்வாளர் குற்ற எண் 314/2018, u/s 379 IPC r/w 21(1) MMDR Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். வழக்கு

சம்மந்தமாக ஆய்வாளர் சீனிபாபு என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அன்றையதினம் எந்தெந்த ஊருக்கு ரோந்துபணிக்கு சென்றோம் என்றால் ஒலக்கூர், புறங்கரை, கீழ்க்காரணை - ஏவலூர் சாலையில் ஏரிக்கரை வரை சென்றோம். மேற்படி ஊர்களுக்கு செல்லும்போது அன்றையதினம் எத்தனை வாகனங்கள் ஆய்வு செய்தோம் என்றால் இந்த ஒரு வண்டியை மட்டும் ஆய்வு செய்தோம். அந்த வழியாக வந்த நபர்களை விசாரித்தோமா என்றால் இல்லை, அந்தபகுதியில் யாரும் வரவில்லை. பட்டியல் சாட்சிகள் 1 - 5 வரை உள்ளவர்கள் காவலர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் தனிநபர்களை சாட்சியாக விசாரித்துள்ளார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரம் இரவு 07.00 மணி என்றால் சுமார் 07.30 மணி இருக்கும். ரோந்து பணிக்கு செல்லும்போது எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் காவல் வாகனம் TN 32 N 0601 சுமோ விக்டர் வாகனத்தில் சென்றோம். ரோந்து பணிக்கு செல்லும்போது என்னென்ன பொருட்கள் எடுத்துச்சென்றோம் என்றால் கைப்பற்றுதல் மகசர் எடுத்துச்சென்றோம். கைப்பற்றுதல் மகசர் எங்கு வைத்து உதவி ஆய்வாளர் தயார் செய்தார் என்றால் சம்பவயிடத்தில் தயார் செய்தார். கைப்பற்றுதல் மகசரில் அனைத்து விவரமும் கணினி தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு தட்டச்சு செய்யப்பட்டதை எங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்றால் காவல் நிலையத்தில் தட்டச்சு செய்யப்பட்டது. காவல் நிலையத்தில் தட்டச்சு செய்யப்பட்ட மகசரில் நானும் த.கா.ராஜராஜசோழனும் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். மணல் எந்த ஆற்றிலிருந்து எடுக்கபபட்டது என்று விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. மணலை அள்ள பயன்படுத்தப்படும் மண்வெட்டி, அன்னக்கூடை ஆகியவற்றை கைப்பற்றினேனா என்றால் இல்லை. நானும் த.கா.ராஜராஜசோழனும், கணபதி ஆகியோர்கள் உதவி ஆய்வாளருக்கு கீழ் பணி செய்கிறோம் என்றால் சரிதான். சம்பவத்தேதியில் எந்த ரோந்துக்கும் செல்லவில்லை, மேல்அதிகாரியின் சொன்னதின்பேரில் உதவி

ஆய்வாளர் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வீட்டில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த டிராக்கடரை இந்த வழக்கில் பொய்யாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர் சம்பவயிடத்தில் தயார் செய்யவில்லை, காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 196/2025 PW-3**

Name : கணபதி
Father / Husband name : உத்திரமூர்த்தி
Village : ரோசணை
Age : 52
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 18.03.2026

Accused present. Defence side counsel present. Witness identified by HC 248.

**முதல் விசாரணை**

நான் தற்போது ரோசணை காவல் நிலையத்தில் 746 சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 03.09.2018 அன்று ஒலக்கூர் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியிலிருந்தபோது மாலை சுமார் 7 மணியளவில் மணல் திருட்டு சம்மந்தமாக உதவி ஆய்வாளர் நடராஜன், 1790 த.கா. இராஜராஜசோழன், டேவிட் அவர்களுடன் நானும் கீழ்காரணையிலிருந்து - ஏவலூர் மார்க்கமாக செல்லும் சாலையில் ரோந்துபணிக்கு சென்றபோது ஒரு டிராக்டர் வந்தது. அந்த டிராக்டரை நிறுத்தி சந்தேகத்தின்பேரில் சோதனை செய்துபார்த்தபோது அதன் ஓட்டுநர் இறங்கி ஓடிவிட்டார். டிராக்டரில் சுமார் 1 யூனிட் ஆற்றுமணல் இருந்தது. டிராக்டர் மற்றும் மணலை அந்நிய சாட்சிகள் யாரும் இல்லாததால் உதவி ஆய்வாளர் டேவிட் மற்றும் ராஜராஜசோழன் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினார். பின்னர் தடயத்துடன் காவல் நிலையம் வந்து வந்து உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். வழக்கு சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கு சம்மந்தமாக என்னை எத்தனை முறை விசாரித்தார் என்றால்

ஒருமுறை விசாரித்தார். எந்தத்தேதியில் விசாரித்தார் என்றால் சம்பவத்தன்று விசாரித்தார். ஆய்வு செய்த சாலை கீழ்க்காரணை - ஏவலூர் சாலை என்றால் சரிதான். அந்த சாலையில் ஒலக்கூர், புறங்கரை, கீழ்க்காரணை, ஏவலூர் செல்லும் பொதுமக்கள் செல்வார்கள் என்றால் சரிதான். அந்த நேரத்தில் கல்லூரி மற்றும் வேலைக்கு செல்லும் நபர்கள் அதே சாலையில் செல்வார்கள் என்றால் சரிதான். வாகன சோதனையின்போது எத்தனை நபர்கள் இருந்தார் என்றால் யாரும் இல்லை. எதன் அடிப்படையில் 1 யூனிட் மணல் என்று சொல்கிறேன் என்றால் தோராயாமாக சொல்கிறேன். அன்றையதினம் எத்தனை வாகனங்கள் ஆய்வு செய்தோம் என்றால் இந்த ஒரு வண்டியை மட்டும் ஆய்வு செய்தோம். மணலை எந்த ஆற்றிலிருந்து எடுத்துவரப்பட்டது என்றால் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எதிரியை கண்டுபிடிக்க என்னை தனிஅதிகாரியாக நியமித்தார்கள் என்றால் சரிதான், நான் புறங்கரை, ஒலக்கூர், கீழ்க்காரணை ஆகிய ஊர்களில் சென்று விசாரித்தேன். மேற்படி ஊர்களில் எந்தெந்த நபர்களை விசரித்தேன் என்று அவர்களின் பெயர் விவரம் சொல்லயியலாது என்றால் சரிதான். டிராக்டரில் மணல் மட்டும் தான் இருந்தது என்றால் சரிதான்.

2. மணலை அள்ள பயன்படுத்தப்படும் மண்வெட்டி, அன்னக்கூடை ஆகியவற்றை கைப்பற்றினேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் உதவி ஆய்வாளர் புகார்தாரர் என்றால் சரிதான். நாங்கள் ஆகியோர்கள் உதவி ஆய்வாளருக்கு கீழ் பணி செய்கிறோம் என்றால் சரிதான். என்னை விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்தது உதவி ஆய்வாளர் என்றால் சரிதான். மேல்அதிகாரியின் சொன்னதின்பேரில் உதவி ஆய்வாளர் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வீட்டில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த டிராக்கடரை மறுநாள் காலை எடுத்துச்சென்று இந்த வழக்கில் பொய்யாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ததால் அவருக்கு ஆதரவாக பொய்யான சாடசியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.